செ. கு. எண்:223 நாள் :24.08.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.8.2013

கோயம்புத்தூர் நகரம், பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகம், துடியலூர் பிரிவு, ஆனைகட்டி காப்புக்காடு அருகே, பனப்பள்ளி பகுதியைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் சுப்பிரமணியம் 11.7.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு வனச்சரகம், பிக்கிலி காப்புகாடு அருகே, பெரியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்து என்பவரின் மகன் சென்னபெருமாள் 12.7.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், குரும்பபாளையம் கிராமம், விளாமுண்டி வனச்சரக கிழக்குப் பகுதி அருகே, மஜரா அண்ணோகவுண்டன்பாளையத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவர் 14.7.2013 அன்று காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. குமரேச கவுண்டர் என்பவரின் மனைவி திருமதி பத்மா 19.7.2013 அன்று தீர்த்தமலை சரகம், வேப்பம்பட்டி காப்புக்காடு, கல்லிக்குட்டை அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், மன்னவனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெள்ளையன் என்பவரின் மனைவி திருமதி லட்சுமி 20.7.2013 அன்று மூங்கில் பள்ளம் அருகே கரடியால் தாக்கப்பட்டு பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், கூத்தம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியன் என்பவர் 25.7.2013 அன்று இட்டிமரத்தொட்டி, ஈரப்பன்காடு பகுதியில் காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், திங்களூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. தொட்டையப்பா என்பவர் 26.7.2013 அன்று மஜரா சிக்குண்சேபாளையம் வனச்சரக

பகுதியில் காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பெராம்பட்டு ரயிலடி பகுதியைச் சேர்ந்த திரு. ஜோதிராஜன் என்பவர் 28.7.2013 அன்று பழைய கொள்ளிடம் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது முதலை கடித்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் 30.7.2013 அன்று தருமபுரி மாவட்டம் அரூர் வனப் பகுதியிலிருந்து வந்திருந்த காட்டு யானைகள் துரத்தியதில், ராமநாயக்கன் பாளையம் வடக்கு கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தன் என்பவரின் மகன் சதீஷ்குமார் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தேவர்பெட்டா கிராமத்தைச் சேர்ந்த திரு. புட்டண்ணா என்பவர் 3.8.2013 அன்று தேவர்பெட்டா வனப் பகுதி அருகே காட்டு யானையால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த சுப்பிரமணியம், சென்னபெருமாள், ஆறுமுகம், பத்மா, முனியன், தொட்டையப்பா, சதீஷ்குமார், புட்டண்ணா, கரடி தாக்கி உயிரிழந்த லட்சுமி மற்றும் முதலை கடித்ததில் உயிரிழந்த ஜோதிராஜன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9